பக்கங்கள் எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா 5.00

# வலம்புரி
# VALAMPURI

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
மாதிரி வினாத்தாள்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 21 புதன்கிழமை (6-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 261

## ★ 196 ஆசனங்களுக்கு 5048 பேர் களத்தில்

# இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இம்முறை அதிகவேட்பாளர் போட்டி!

## யாழ். மக்கள் தேர்தலில் ஆர்வம் இல்லை

(கொழும்பு நிருபர்)

இலங்கையின் பதினோராவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்கு நாடு தழுவிய ரீதியில் ஐயாயிரத்து 48 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

இத்தேர்தல் களத்தில் பதிவு செய்யப்பட்ட 46 அரசியல் கட்சிகளில் 29 அரசியல் கட்சிகளினதும், 99 சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

சுதந்திர இலங்கையில் எந்த ஒரு தேர்தலிலும் இந்தளவு எண்ணிக்கையில் வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதிக்கவில்லையென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெறவுள்ள 22 மாவட்டங்களில் கொழும்பு மாவட்டத்திலேயே கூடுதலான அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த கையோடு அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன இது வரை ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே தனது விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்மீதான அரசின் யுத்தத்தைக் கூட்டணிவன்மையாககண்டிக்கிறது

### செய்தியாளர் மாநாட்டில் மாவை

வடக்குக் கிழக்கில் இடம் பெற்று வருகின்ற யுத்தத்தினை நிறுத்தி இனப்பிச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச மத்தியஸ்தம் மூலம் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்த வேண்டுமென்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் உறுதியாகவுள்ளது.

இந்த விடயத்தில் கூட்டணி அரசியல் பலத்துடன் எதிர் காலத்தில் மேலும் செயற்பட வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின்முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்மாவட்டத்தின்கூட்டணி வேட்பாளருமான மாவை சேனாதிராஜா நேற்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிடும் செய்திக்கு சுந்தரம் டிவகலாலா மறுப்பு

(திருகோணமலை)

தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் தாம் போட்டியிடுவதாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட செய்தியில் எந்த விதமான உண்மையும் இல்லையென வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நேற்று 'வலம்புரி'க்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சில செய்தி நாளேடுகள் தாம் தேர்தலில் போட்டியிடுவதாக வெளியிட்டுள்ள செய்தியில் எதுவித உண்மை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டணியின் வேட்பாளர் இருவர்வாபஸ் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலிலிருந்து இரண்டு வேட்பாளர்கள் வாபஸ் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டியலின் 7 ஆவது வேட்பாளராக இடம் பெற்ற தம்பு லோகநாதபிள்ளை, 10 ஆவது வேட்பாளராக இடம் பெற்ற சின்னத்தம்பி வேலாயுதம் ஆகிய இருவருமே தமது வேட்பாளர் பதவியை வாபஸ் பெற்றவர்களாவர்.

இது தொடர்பாக இரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கட்சிகளின் தேசியப்பட்டியல் வெளியாகியது

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, அ. வரதராஜப் பெருமாள் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது; தேசியப்பட்டியலில் ஏ. எச். அஸ்வர், பி.பி.தேவராஜ், ஏ.எம்.ராஜன், எம்,எஸ். செல்லச்சாமி ஆகியோரின் பெயர்களை வெளியிட்டுள்ளனர்.

ஜே.வி.பி யின் தேசியப்பட்டியலில் தமிழர் ஒருரும்

தினை திருத்தி இனப்பிச் சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச மத்தியஸ்தம் மூலம் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்த வேண்டுமென்பதில் தமிழர்

இந்த விடயத்தில் கூட்டணி அரசியல் பலத்துடன் எதிர்காலத்தில் மேலும் செயற்பட வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்மாவட்டத்தின்கூட்டணி வேட்பாளருமான மாவை சேனாதிராஜா நேற்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, அ.வரதராஜப் பெருமாள் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் ஏ.எச். அஸ்வர், பி.பி.தேவராஜ், ஏ.எம்.ராஜன், எம்,எஸ். செல்லச்சாமி ஆகியோரின் பெயர்களை வெளியிட்டுள்ளனர்.

ஜே.வி.பி யின் தேசியப்பட்டியலில் தமிழர் ஒருவரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்திற்குத் தெரிவானால் தரைவழிப்பாதையால்பயணஒழுங்கு

## ஐ. தே. கட்சி மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நாம் தெரிவு செய்யப்பட்டால் தமிழ் மக்களின் துன்பங்களைப்போக்கப் பாடுபடுவோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் த,மகேஸ்வரன் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: நாம் மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்றால் முதல் நடவடிக்கையாக செஞ்சிலுவைச் சங்கத்துடன்இணைந்து வெளி மாவட்டங்களுக்குத் தரைப்பாதையூடாகப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவோம்,

நாம் தேர்தலில் போட்டியிடக் காரணம் 94 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்குறுதிகள் பலவற்றை அள்ளி வீசி

(8ஆம்பக்கம் பார்க்க)

# அரச ஊழியர்களுக்கு மேலும் ஒரு சம்பள உயர்வு

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு மேலும் ஒரு இடைக்காலச் சம்பள உயர்வை ஜனாதிபதி அறிவிப்பாரென நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் அரசசார்புடைய தொழிற் சங்கங்கள் ஜனாதிபதியை அலரிமாளிகையில்சந்தித்து சுமார்ஆறுமணித்தியாலங்கள் பேச்சுநடத்தியுள்ளன.

இதனையடுத்து மேலும்400 ரூபாவை இடர்காலக்கொடுப்பனவாக வழங்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாகவும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் 50 சடலங்களைப் புலிகள் ஒப்படைப்பர்

(வவுனியா)

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் கடந்த மூன்று தினங்களாக இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலின் போது இராணுவத்தினரின் 50 சடலங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இச்சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வவுனியாவில் வைத்து வழங்குவதற்கு விடுதலைப்புலிகள் முன்வந்துள்ளதாகவும், இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின்பேச்சாளர் ஹர்ஸா குணவர்த்தன இராணுவத் தலைமைப் பீடத்துடன் தொடர்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களைக் 'கிலி'கொள்ள வைத்த குண்டுவீச்சு விமானமும் ஹெலியும் !

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்றுப் பரவலாக குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியும், எம்.ஐ 24 ரக இராட்சத ஹெலிகள் சரமாரியாக துப்பாக்கி, றொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தன.

இத்தாக்குதல் சம்பவங்களை அடுத்து மக்கள் பெரும் பதற்றத்துக்குள்ளானார்கள்.

குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுப் பிற்பகல் 4-30 மணியளவில் பேரிரைச்சலுடன் தாழப்பறந்து குண்டுகளை வீசித்தள்ளிய போது உரும்பிராய், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி கல்வியங்காடு பகுதிமக்கள் வீடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 4-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 143778 ஏ | 143778 பி |
| 146384 ஏ | 146384 பி |
| 146953 ஏ | 150553 ஏ |
| 150706 ஏ | 150706 பி |
| 150706 சி | 150730 ஏ |
| 150731 ஏ | 152171 ஏ |
| 152175 ஏ | 152175 பி |
| 152175 சி | 153233 ஏ |
| 153233 பி | 153233 சி |
| 155093 ஏ | 155094 ஏ |
| 155246 ஏ | 155246 பி |
| 155303 ஏ | 155303 பி |
| 155343 ஏ | 155343 பி |
| 155343 சி | 156043 ஏ |
| 157793 ஏ | 157793 பி |
| 157796 ஏ | 157796 பி |
| 157796 சி | 157796 டி |
| 157807 ஏ | 157807 பி |
| 157820 ஏ | 157857 ஏ |
| 157857 பி | 157857 சி |
| 157911 ஏ | 158819 ஏ |

**நல்லூர்**

| | |
|---|---|
| 143791 ஏ | 143791 பி |
| 143791 சி | 143791 டி |
| 143791 ஈ | 143791 எவ் |
| 150652 ஏ | 150652 பி |
| 150652 சி | 152193 ஏ |
| 152193 பி | 153442 ஏ |
| 153442 பி | 153448 ஏ |
| 155268 ஏ | 155274 ஏ |
| 155274 பி | 157734 ஏ |
| 157925 ஏ | 157925 பி |
| 157925 சி | 157925 டி |
| 157930 ஏ | 157930 பி |
| 157954 ஏ | 158949 ஏ |
| 158949 பி | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 146493 ஏ | 146493 பி |
| 146493 சி | 150764 ஏ |
| 151811 ஏ | 151811 பி |
| 151811 சி | 151811 டி |
| 152059 ஏ | 152059 பி |
| 152059 சி | 152160 ஏ |
| 152226 ஏ | 152226 பி |
| 152234 ஏ | 152234 பி |
| 152234 சி | 153313 ஏ |
| 155355 ஏ | 155355 பி |
| 155355 சி | 155425 ஏ |
| 155425 பி | 156031 ஏ |
| 156058 ஏ | 156058 பி |
| 156079 ஏ | 156087 ஏ |
| 157728 ஏ | 157728 பி |
| 157728 சி | 157728 டி |
| 157728 ஈ | 157775 ஏ |
| 157775 பி | 157801 பி |
| 157810 ஏ | 157851 ஏ |
| 157851 பி | 157851 சி |
| 157852 ஏ | 157973 ஏ |
| 157973 பி | 157973 சி |
| 158785 ஏ | 158785 பி |
| 158785 சி | 158801 ஏ |
| 158904 ஏ | 158904 பி |
| 158930 ஏ | 158930 பி |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 155281 ஏ | 155281 பி |
| 155281 சி | 155426 ஏ |
| 155446 ஏ | |
| 156069 ஏ | 157970 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 150357 ஏ | 150498 ஏ |
| 150498 பி | 150498 சி |
| 150642 ஏ | 150642 பி |
| 150642 சி | 151919 ஏ |
| 151919 பி | 151919 சி |
| 151951 ஏ | 151951 பி |
| 151951 சி | 151953 ஏ |
| 151953 பி | 151956 ஏ |
| 151956 பி | 151956 சி |
| 152106 ஏ | 152106 பி |
| 155158 ஏ | 155158 பி |
| 151158 சி | 155158 டி |
| 155243 ஏ | 155328 ஏ |
| 156021 ஏ | 156937 ஏ |
| 156937 பி | 157802 ஏ |
| 157880 ஏ | 157880 பி |
| 157880 சி | 157883 ஏ |
| 157883 பி | 157883 சி |
| 157883 டி | 157885 ஏ |
| 157888 பி | 158493 ஏ |
| 158493 பி | |

(சு)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள விவசாயிகளுக்கு விவசாய உள்ளீட்டுப்பொருட்கள் வழங்குவதற்கான நடவடிக்கையை தொண்டர் நிறுவனங்கள் முன்னெடுக்கவுள்ளது.

இதற்காக அப்பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த விவசாயிகள் பற்றிய விபரங்களை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரட்டி வருகின்றனர். (க-12)

## கல்லூரி மைதானத்தில் எரிகுண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மத்தியமகாவித்தியாலய மைதானப் பகுதியில் அண்மையில் எரிகுண்டு ஒன்று வீழ்ந்து வெடித்தது.

இதனால் மைதான சுற்றுப்புற வேலிகளும், புற்றரைகளும் தீப்பற்றிக் கொண்டன. எவரும் இச் சம்பவத்தில் பாதிக்கப்படவில்லையென தெரிய வருகிறது. (த)


# வாழ்த்துகின்றோம்

தமிழ் மக்களின் துயர் துடைக்க
உழைத்து வரும்
இளம் சட்டத்தரணியும்
யாழ். மாநகர பிரதி மேயருமான
**திரு. நடராஜா இரவிராஜ்**
அவர்கள்
தமிழர் விடுதலைக் கூட்டணியின்
நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளராகத்
தெரிவு செய்யப்பட்டமையையிட்டு
மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.
இவர் நாடாளுமன்ற உறுப்பினராக
தெரிவுசெய்யப்பட வாழ்த்துகின்றோம்.

- தென்மராட்சி நண்பர்கள்.

(1699)


யாழ்.மாவட்டத்தில்

# அரச ஊழியருக்கான நட்டஈடு அதிகரிக்கப்படவேண்டும்

## அமைச்சரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்களுக்குவன்செயல் மற்றும் பயங்கரவாத நிகழ்வுகளினால் சேதமாக்கப்படும் வீடுகள் மற்றும் உடமைகளைத் திருத்தம் செய்வதற்கென அரசினால் வழங்கப்படுகின்ற ஒருலட்சத்து50 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுத் தொகை குறித்த தேவைக்குப் போதாமல் இருப்பதால் அத்தொகையை 5லட்சம்ரூபாவாக அதிகரித்துத் தரும்படி அரச அதிகாரிகள் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -1989ம் ஆண்டு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 49/89 இலக்க சுற்றுநிருபப்பிரகாரம் 1987 ஜுலை ஆகஸ்ட் மாத காலங்களில் வன்செயல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்த வீடுகள் உடமைகள் திருத்துவதற்கான நஷ்டஈடாக ஒருலட்சத்து50ஆயிரம் ரூபாவை விண்ணப்பித்துப் பெற குறித்த சுற்றுநிருபம் அதிகாரமளிக்கின்றது.

ஆயினும் தற்போதைய நிலையில் கட்டடப்பொருட்களின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளமையால் அனுமதிக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையுடன் சேதமடைந்த வீடுகள் மற்றும் உடமைகளைத்திருத்தம் செய்ய முடியாத நிலை உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-77)

## ஆலயத்தில் சினிமாப்படம்

(தென்மராட்சி)

வடமராட்சி பிரதேசத்திலுள்ள சில இந்து ஆலயங்களில் விநாயகர் சதுர்த்தி தொடர்பான விசேட பூஜைகள் மற்றும் கிரியைகள் இடம்பெற்று முடிந்ததைத் தொடர்ந்து இரவு நேரம் முழுவதும் பக்தர்களைக் கவரும் நோக்குடன் தமிழ் சினிமாப் படங்கள் வீடியோவில் காண்பிக்கப்பட்டன எனத்தெரியவருகிறது.

இவ்விடயம் குறித்து சைவ சமய அபிமானிகள் மத்தியில் மிகுந்த விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (செ - 77)

## அடையாள அட்டை பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர், தமது அடையாள அட்டைகளை உரும்பிராயில் இயங்கும் யாழ். நாவற்குழி மகாவித்தியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அதிபர் தெரிவித்துள்ளார். [த]

## விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினது கீழ் காணும் முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் 09-10-2000 ஆம் திகதி ஆரம்பமாகும்.

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு-2000

விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு-2000

விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு-1999

விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு-2000

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதி விண்ணப்பப் படிவத்தினை உரிய கட்டண பற்றுச்சீட்டுடன் 23-09-2000 ஆம்திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை விண்ணப்பப் படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி முதலாம் அரையாண்டுப் பரீட்சைகளின் போது தோற்றக் கூடிய பரீட்சை அலகுகளின் விபரத்தையும் நேர சூசியையும் விஞ்ஞான பீட அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர்

(இ/772)

## நாளை ஆசிரிய நேர்முகத் தேர்வு கொக்குவில் இந்துவில்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் 1999 என்னும் திட்டத்தின் கீழ், நேர்முகத்தேர்வொன்று யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் தற்காலிக பணிமனையில் நாளை 07-ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிமுதல் நடாத்தப்படவுள்ளது நேர்முகத் தேர்வு நாடிகளுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன நேர்முகத் தேர்வுநாடிகள் கோரப்பட்ட ஆவணங்களுடன் குறித்த நேரத்திற்கு நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி சே. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு;

**பிரிவு 104**

ராஜேந்திரம் தேவகுமரன் (ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்)

நடராஜா கமலா (கண்டி வீதி, அரியாலை)

பூவையா விமலராஜன் (கற்குழி, வவுனியா)

செல்வநாதன் கேசவன் (சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

அமலதாஸ் செராஜஸ் நிஷாந்தன் (பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்)

ராஜரட்ணம் சசிகுமார் (வண்ணார்பண்ணை, மானிப்பாய்)

ஜேம்ஸ் ஜெயகாந்தன் (கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்)

நவரட்ணம் கெங்காசுதன் (அளவெட்டி)

திலகநாயகம் பிரியவதனன் (பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்)

**பிரிவு 105**

தேவராஜா புலேந்திரகுமார் (அரியாலை, யாழ்ப்பாணம்)

சபாபதிப்பிள்ளை பிரியகாந்தினி (ராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)

குணரட்ணம் ரமணிதரன் (ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை)

இளம்சிங்கம் செல்வமகேசன் (நீராவியடி, யாழ்ப்பாணம்)

சுப்பிரமணியகுருக்கள் சரவணபவன் (மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில்மேற்கு)

சிவநேஷ்வரராஜா ராதாகிருஷ்ணன் (பண்டாரக்குளம் லேன் நல்லூர்)

சிவசக்தி நடராஜா (பலாலி வீதி திருநெல்வேலி)

ஜெசிந்தா நல்லையா (அரியாலை யாழ்ப்பாணம்)

துரைராஜசிங்கம் வாகீஸ்வரன் (கலாசாலை வீதியாழ்ப்பாணம்)

ஜெயதர்சினி ஜெயபாலரட்ணம் ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம்)

வரதராசா பிரவாகர் (கந்தர் மடம் யாழ்ப்பாணம்)

## கோப்பாய் பயிற்சிக்கல்லூரியில் கடமையாற்றிய விரிவுரையாளரும் தேர்தலில் போட்டியிடுகிறார்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் சிங்கள அணியின் முதன்மை வேட்பாளராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுதர்ம ஜெயக்கொடி என்பவரே 'ஆமைப்பூட்டு' சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக மேலும் அறியப்படுகிறது.

யாழ். மக்களின்துன்பத்தை நீக்குவதற்காகவே தான் இத்தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும் இதற்காக சிங்கள பிரமுகர்களை தனது அணியில் சேர்த்துக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தேர்தலில் போட்டியிடும் எமது முக்கிய நோக்கம் அரசியல் இலாபம் அல்ல முற்று முழுதாக யாழ். மக்களின் பிரச்சினைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் எடுத்துக் கூறுவதற்கே என்றார். (க-12

## ஏமாற்றம்

நச்சமோட்டையில் உள்ள ''தவம் ஸ்ரோர்ஸ்'' நேற்று மாலை சீருடை அணிந்தவர்களால் உடைக்கப்பட்டபோது அக்கடைக்குள் வெறும் தளபாடங்களுடன் மூன்று காய்ந்த பணிஸ் மட்டுமே இருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஷ)

# யுத்த நெருக்கடியில் யாழ். குடாநாடு

# பொதுத் தேர்தல் என்பது அவசியம்தானா?

தற்போது நடைபெறுகின்ற யுத்த அனர்த்தங்களால் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து ஏதிலியாகி இருப்பதற்கு இடமின்றி கால் வயிற்று கஞ்சிக்குக்கூட வழியின்றி பிச்சை எடுக்கும் நிலையில் மரநிழல்களிலும், பாழடைந்த மடங்களிலும் தஞ்சமென வாழ்கின்ற மக்களுக்கு தேர்தல் ஒரு கேடா என கேட்டு நிற்கிறார்கள். அண்மையில் தென்மராட்சியில் நடந்து முடிந்த யுத்தத்தால் இழந்த உறவுகள், அழிந்த சொத்துக்கள் எத்தனையென்று இன்று அறிய முடியாத அவல நிலையிலுள்ளனர். தென்மராட்சி மக்கள் வன்னியில் வாழும் உறவுகள் ஒரு நேர உணவுக்கே வழியில்லாமல் பச்சிளம் குழந்தைகளுக்கு பால் மாக்கூட இல்லாது பெற்றவனும் பெற்றவளும் பார்த்து துன்பப்படுவதும், நோயே குடிகொண்டு எலும்பும் தோலுமாகி நிலை தடுமாறவைக்கும் அப்பிரதேசத்தில் மருத்துவ வசதிகள் கூட இல்லாது தடுமாறும் தமிழ் ஜீவன்களுக்கு தேர்தலும், வாக்கும் ஒரு தேவையா? என வினவி நிற்கிறார்கள். பள்ளிச் சிறுவர்கள் பாடசாலை செல்ல முடியாமலும், பாடவிதானங்களை விளங்க முடியாமலும் அரசு செய்யும் தப்புத்தாளங்களால் எதிர்காலமே சிதைவுறும் நிலையில் அந்தரிக்கும் மாணவர்கள் எத்தனை பேர் இதனையெல்லாம் கண்ணுற்று கதறியழும் மக்களுக்கு நடைபெறப் போகும் தேர்தலால் விடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்படுமா?

பொன்னானவாக்கு என்று புகழ்ந்து தள்ளி புள்ளடி இடுங்கள் எமது சின்னத்துக்கு எனக்கூறி பாராளுமன்றம் சென்றவர்களால் எமக்கு என்ன நடந்தேறியது இன்னொருவரை பதவியில் அமர்த்தி அந்தஸ்தை கொடுத்த கதையே எமது கதையாய் முடிந்தது. இந்த நாட்டை முழுவதும் தனதாக்கி ஆட்சி செய்யும் இனம் இன்னொரு இனத்தை ஒடுக்கும் முறையில் தோல்விகாணலாம். ஆனால் எதுவித ஆதாரமற்ற தமிழினத்தை அந்த இனத்திலுள்ளவர்களே ஏமாற்ற முனைவது மிகவும் பாதகமான பாவ வழியாகும் தான் வந்த நோக்கம் நிறைவேற இடமில்லையென்று கண்டால் சூடு கண்ட பூனையாக பரிதவிக்கும் விவசாயிகள் எத்தனை லட்சம் பேர் யாருக்கு சொல்லி அழுவது யாரிடம் சொல்லிப் பரிகாரம் காணுவது என்று திகைத்து தம்மைப்படைத்த இறைவன் தான் தமக்கு வழிகாட்ட வேண்டும் என அலலுற்று அழும் வேதனையில் இத் தேர்தல் எங்களுக்கு என்ன வழி காட்டப் போகின்றது என அங்கலாய்கின்றனர் யாழ். குடா நாட்டு மக்கள்

இன்றுவரைக்கைப்பொறுத்த வரை தமிழ் அரசியல் வாதிகளின் நிலைப்பாடு வேறு வாழும் பொது மக்களின்

## சங்குநாதம்

நிலைப்பாடு வேறு; மொழி, தொழில், இருப்பிடம், உறவுகள் என்று மனித வாழ்வோடு ஒட்டிய வாழ்வுரிமைகளை யாவும் இழந்து நிற்பவர்கள் அப்பாவித் தமிழ் பொதுமக்களே. அரசியல் வாதிகள் ஏதோ ஒரு விதத்தில் தம்மையும் தமதுடைமைகளையும் ஏன் தம் உறவுகளையும் காப்பாற்றிக்கொள்ள பதவிகள் பந்தங்கள் அடிப்படையாகின்றன. ஆனால் மக்கள் விதியை நொந்து இந் நாட்டிலே தமிழனாய் பிறந்ததே பாவம் என்று தன்னையும் சூழ உள்ள உறவுகளையும் சலிப்போடு பார்த்துக் கொள்கின்றான். இவ்வாறு வாடி வதங்கும் தமிழனுக்கு தேர்தல் வேம்பாகக் கசக்கிறது. தான் போகக் காணவில்லை மூஞ்சூறு விளக்கு மாற்றை சுமந்த கதையாக தேர்தல் அட்டைகள் கனக்கின்றது. எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதாக ஒரு சிலர் பட்டம் பதவி பெற்றிருக்கலாம். இதிலும் தரம் அற்ற ஒருவர் பெறும் பட்டம்பதவிதரமான நூறு பேரைச் சிந்திக்க வைத்து வெறுப்பூட்டுகிறது. இது காலம் காலமாகப்புரண்டு வரும் புரட்டுத்தனங்களாகும் இனப்பிரச்சினை உச்சம் பெற்ற இக்காலவேளையிலும் இவ்வகைப்பயன்பாடுகள் தமிழனுக்கு தமிழனே குழிபறிப்பதற்கு கொப்பாகும்.

### புயலின் பின் அமைதி

இருந்தும் சில தோற்றங்களையும் தன்னகத்தே கொண்டு

### தொடர்பு உண்டா

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ந் திகதி நடைபெறத் திட்டமிட்டிருக்கும் தேர்தலுக்கும், தமிழ் இனத்துக்குமான தீர்வுக்கும் ஏதேனும்தொடர்புண்டா என்றால்விடைபூச்சியமே. தமிழ்க் கட்சிகள் நாடாளுமன்றை அலங்கரிப்பதால் எதுவித விமோசனமும் ஏற்படப் போவதில்லை ஆளுங்கட்சியாக வரப்போவது பெரும்பான்மைச் சிங்களக் கட்சியே. ஆளுங்கட்சியால், நிதி உதவி வழங்கும் வெளிநாடுகளும், நிறுவனங்களும் தொடர்ந்தும் உதவ வேண்டும் என்பதற்காக பாசாங்கு காட்டும் சட்ட மூலங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்போது கடந்த ஓகஸ்ட் மாதம் பொ.ஐ.ஐ. முன்னணியினால் சமர்ப்பித்த சட்டமூலத்துக்கு என்ன நடை பெற்றதோ அதுவே இனி வரும் நாளையிலும் நடைபெறும் என்பது திண்ணம். இந்த நாட்டில் நாடாளுமன்ற எதிர்க்கட்சியென்று வந்தால் நன்மையையும், தீமையையும் எதிர்த்தே ஆக வேண்டும் என்பதும, பௌத்த மகாசங்கங்களினதும், நிக்காயாக்களினதும், பேரின வாதிகளின் இனவாதமும் தமிழனுக்கென்று ஓர் உரிமையையும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதும் தற்பொழிவாகும். எனவே மலையைக் கவ்வி எலியைப்

## சிரபுரத்தான்

பிடித்த கதை தான் தமிழ் உறுப்பினர்களுக்கு ஏற்படும் கதி. ஆனால் தேர்தலை நடத்தி முடிப்பது பெரும் வெற்றியென்று அரசு மார்பு தட்டிக்கொள்ளலாம்.

### தேர்தல் முழக்கம்

பயங்கரவாத தடைச் சட்ட நீடிப்புடன், செய்தித் தணிக்கையும் நீக்கப்படாது நாடாளுமன்றம் கலைக்கப் பட்டு தேர்தலுக்கும் நாள் குறிக்கப்பட்டுவிட்டது. வேட்புமனு தாக்கலும்நடந்து முடிந்து விட்டது. இதனைத் தொடர்ந்துபிரச்சாரங்களும், பிரச்சினைகளும் ஆரம்பமாகியுள்ளது. தென்னிலங்கையில் நடைபெறும் பிரச்சாரங்களில் யுத்தச் செலவு தாங்க முடியாதென்றும், இதனால் இவ்வருட முடிவுக்குள் யுத்

குழுக்களும் யுத்தம் நிறுத்தப்பட்டு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என தேர்தல் காலத்து அறிவுறுத்தல்விடுக்கின்றனர். இராணுவத் தளபதியாக பதவியேற்ற லயனல் பல்லேகலே பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்வுகாணப்படல் வேண்டும் என அழுத்தம் தெரிவித்தார். தேர்தலுக்கான பெரும் யுத்தம் ஒன்றை தொடக்கி வைத்துள்ளார். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் சிங்கள, தமிழ் அரசியல் வாதிகளால் தமிழர்கள் அழிந்துபோக வழியுண்டே தவிர நாட்டில் விமோசனம் ஏற்படப் போவதில்லை சுகமே இருந்து சுகம் அனுபவிக்க துடிப்பவர்களுக்குஒன்றுமட்டும்தெளிவு. பாதை செப்பனிட்டவன் ஒருவன், அவ்வழியைப் பாவிப்பவர்கள் வேறு பலர். தந்தையின் பெயர் சொல்லி வாழும் தனையர் போலும் 'அப்பன் செத்தால் தெரியும் அப்பன் அருமை, உப்பு சமைத்தால் தெரியும் உப்பின் அருமை' என விளக்கத்தேவையில்லை.

முற்றும் துறந்து காடேகி தவம் இயற்றும் முனிவனும், தான் முனிய பிற அழிய வலிமை பெறும் சுயநலமே. தன்னையே தற்கொடையாக்கி தனக்கென ஒன்றும் நினையாது மண் நிலைக்க தன்னை அழிப்பவன் யாருடைய சுயநலத்துக்கு. இதை உணராவிடத்து தமிழினத்துக்கு விடிவே இல்லையெனலாம்.

## பதவிஏற்பு

(மண்டைதீவு)

வேலணைப்பிரதேசசபையின் உறுப்பினராக கடமையாற்றி மரணமடைந்த இர சுமுருகேசுவின் இடத்திற்கு சிவசங்கரப்பிள்ளை துரைரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-111)

## இராசி பலன்

6 9 2000
(ஆவணி 21 புதன்)
அட்டமி பி ப 1.51 வரை
கேட்டை மு. இ
10. 07 வரை
இராகுகாலம்
12.04 1 34
சுபநேரம் 4-34 6 04

**மேடம்**
வாக்குக் கலகம், அலைச்சல், காரியம் தாமதம்.

**இடபம்**
கனஸ்திர விடயம், விருந்துண்ணல், பிரயாணம், பொருள் வரவு.

**மிதுனம்**
தொழில் முயற்சி விருத்தி, சத்துரு ஜெயம், களியாட்டம்

**கடகம்**
சிறுரோகம், மனக்கிலேசம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
உறவினர் உறவில் சிறுபகை, பணச் செலவு, துக்கச் செய்தி.

**கன்னி**
பணவரவு, ஆரோக்கியம், பிரயாணம், சகோதரர் உதவி.

**துலாம்**
காரிய நட்டம், விதண்டாவாதம், எதிர்பாராதநன்மை.

**விருச்சிகம்**
தெய்வ நம்பிக்கை, தேக சுகம், காரிய வெற்றி.

**தனுசு**
நினைத்த காரியம் தாமதம் பிரயாண அலைச்சல், சயன சுகக்குறைவு.

**மகரம்**
பணவரவு, நினைத்தகாரியம் ஜெயம், கீர்த்தி, குடும்ப சுகம்.

**கும்பம்**
பிரயாணம், செய்தொழில் மேன்மை, சென்ற இடத்தில் செல்வாக்கு.

**மீனம்**
தந்தைவழி உறவு, வீண் பயம், சிறு வியாதி, காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மூலப் பொருட்கள் போதாமையால் வீதி திருத்துவதில் தாமதம்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பிரதேசத்தின் பிரதான வீதி திருத்துவதற்கான மூலப் பொருள்களான மண், கல், தார் என்பன கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி தெரி

அத்துடன் வீதித் திருத்த வேலைகள் முடிந்ததும் புதிய பஸ் வண்டி ஒன்றினை வட பிராந்திய போக்கு வரத்துச் சபை சேவையில் ஈடுபடுத்த வுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(செ-75)

லாம். ஆனால் எது விதஆதார மற்ற தமிழினத்தை அந்த இனத்திலுள்ளவர்களே ஏமாற்ற முனைவது மிகவும் பாதகமான பாவ வழியாகும் தான் வந்த நோக்கம் நிறைவேறஇடமில்லையென்று கண்டால் சூடு கண்ட பூனையாக அந்த இடத்தை நாடாது உண்மைநிலையை தன்னினத்துக்கு விளங்க வைத்தல் வேண்டும் இதை விடுத்துதன் பதவி அந்தஸ்தைப் பேசிப் பாதுகாப்பதில் பயனில்லை.

பரிதவிப்பு

பொதுவாக வட- கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களில் கணவனை இழந்த விதவைகள் எத்தனை ஆயிரம் தொழில் செய்ய முடியாத நிலையில் எத்தனை ஆயிரம் கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் வேதனையோடும் சோதனையோடும் பெற்ற இக்காலவேளையிலும் இவ்வகைப்பயன்பாடுகள் தமிழனுக்கு தமிழனே குழிபறிப்பதற்கு கொப்பாகும்.

புயலின் பின் அமைதி

இருந்தும் சில தோற்றங்களையும் தன்னகத்தே தேக்கி வைத்துள்ளான். என்றோ ஒரு நாள் விடிவு வரும் சுற்றங்கள் சேரும். சொந்தங்கள் குலாவும் நாம்பட்ட துன்பம் எம்மோடு முடியட்டும் எம் சந்ததியாவது சுதந்திர ஒளியில் வாழட்டும் 40 வருடங்களாக நடந்த யுத்தத்திலிருந்து வியட்னாம் விடிவு பெறவில்லையா? சிதைந்த இஸ்ரேல் இப் போது சீறவில்லையா? புயலின் பின் ஏற்படும் அமைதி நடை பெறும் யுத்தத்தின்பின்ஏற்படத்தான் போகின்றது. என்ற எதிர்பார்ப்பே இன்றைய ஏக்கம். கட்சிகளும், சுயேச்சைக் முடிந்து விட்டது. இதனைத் தொடர்ந்துபிரச்சாரங்களும், பிரச்சினைகளும் ஆரம்பமாகியுள்ளது. தென்னிலங்கையில் நடைபெறும் பிரச்சாரங்களில் யுத்தச் செலவு தாங்க முடியாதென்றும், இதனால் இவ்வருட முடிவுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும், இதற்கு நவீன கனரக ஆயுதங்கள் பெற்றுள்ளோம் என பொ.ஐ.ஐ. முன்னணியும், சகல கட்சிகளுடனும், குறிப்பாக பௌத்த மகா சங்கத்தினருடனும் கலந்து பேசி தமிழர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதென ஐ.தே. கட்சியும், நாங்கள் தான் சிங்கள மக்களினதும், பௌத்த மதத்தினதும் பாதுகாவலர் என்று வேறுசில கட்சிகளும் முழக்கமிட்டு வருகின்றன. அதே வேளை தமிழ்க்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பிரதேசத்தின் பிரதான வீதி திருத்துவதற்கான மூலப் பொருள்களான மண், கல், தார் என்பன கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி வீதி திருத்தத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், வீதித்திருத்தத்திற்குத்தேவையானகல்லினை நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தேவையான அளவில்தராதமையினாலேயே திருத்த வேலைகள் மந்தகதியில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்கள் தேவையான அளவு கிடைக்கும் பட்சத்தில் விரைவாக வீதித் திருத்த வேலைகளை முடிக்க முடியும் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வீதித் திருத்த வேலைகள் முடிந்ததும் புதிய பஸ் வண்டி ஒன்றினை வட பிராந்திய போக்கு வரத்துச் சபை சேவையில் ஈடுபடுத்த வுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(செ-75)

## நிவாரணம் வழங்கல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவிலஉள்ள கந்தர்மடம் ஜே-102 கிராமசேவை அலுவலர் அலுவலகத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

''யு. என். எச். சி. ஆர்.'' நிறுவனத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க-103)


கண்மூடித்தனமாக ஆதரிக்கவும் மாட்டோம்
கண்மூடித்தனமாக எதிர்க்கவும் மாட்டோம்
முறையான அரசியல் தீர்வுக்காய் போராடுவோம்
உருப்படியான தீர்வு முயற்சிகளுக்கு
ஒத்துழைப்போம்.

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி. (புளொட் + ஈரோஸ்)

[1689]

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

**மாதிரி வினாத்தாள் 2** பகுதி I

ஆக்கம் : மு. விக்னேஸ்வரன் *B.A (Dip in Edu)*

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
1-40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

21) வட அமெரிக்காவையும், தென்அமெரிக்காவையும் பிரிப்பது?
(1) சுயெஸ் கால்வாய் (2) பேரிங் தொடுகடல்
(3) பனாமாக் கால்வாய் (4) ஒக்கொட்ஸ் கடல்

22) புராதன போய மனைகளில் ஒன்று
(1) லோவா மகாபாய (2) தோவா மகா பாய
(3) கனிட்ட திஸ்ஸ மகா பாய (4) தூபராம மகா பாய

23) ஏலவே இருக்கின்ற இராணுவ பலத்தை அல்லது ஆயுத பலத்தைக் குறைத்தல் என்பது?
(1) ஆயுதக் குறைப்பு (2) ஆயுத ஒழிப்பு
(3) யுத்த நிறுத்தம் (4) யுத்தப் பிரகடனம் எனப்படும்.

24) மக்களால் மக்களுக்காக நடாத்தப்படும் ஆட்சி என்பது?
(1) சர்வாதிகார ஆட்சி (2) குடியாட்சி
(3) முடியாட்சி (4) ஒற்றை ஆட்சி

25) மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்குமிடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட நாடு?
(1) இந்தியா (2) இலங்கை (3) இஸ்ரேல் (4) இங்கிலாந்து

26) தென் மாகாணத்தில் சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடம்?
(1) கட்டுநாயக்கா (2) கொக்கலை (3) பட்டியாண (4) பால

27) பதினாறு மாகாணங்களை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தவர்?
(1) சோல்பரி குழுவினர் (2) டொனமூர் குழுவினர்
(3) கோல்புறூக் குழுவினர் (4) மானிங் குழுவினர்

28) பாராளுமன்றக் கூட்டங்கட்கு தலைமை தாங்குபவர்?
(1) ஜனாதிபதி (2) சபாநாயகர் (3) பிரதமர் (4) குழுக்களின் தலைவர்

29) இலங்கையின் தற்போதைய தேசியக் கொடி உருவாக்கக் குழுவின் தலைவர்?
(1) J. R. ஜெயவர்த்தனா (2) லலித் ராஜபக்ச
(3) ஜோன் கொத்தலாவல (4) S. W. R. D, பண்டார நாயக்க

30) உலகப் புகழ் பெற்ற மோனலிசா ஓவியத்தை வரைந்தவர்?
(1) பிக்காசோ (2) மாட்டின் லூதர்
(3) லியானாடோ டாவின்சி (4) கார்ள் புஸ்

31) சமூகவிரோத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை விதிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது?
(1) ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் கருத்துக்களை நோக்குதல்
(2) தண்டங்கள் மூலம் அரசுக்கு வருமானம் திரட்டுதல்
(3) நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளில் அவர்களால் பயன் பெறச் செய்தல்
(4) புனருத்தாரணம் மூலம் அவர்களை நற்பிரஜைகள் ஆக்குதல்.

32) தற்போதைய இலங்கை அரசியல் யாப்புக்கு இணங்க அமைச்சரவை சம்பந்தமான கூற்றுகளில் சரியானது?
(1) ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவராவார்
(2) எல்லா அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம் பெறுவர்
(3) மாகாண முதலமைச்சர்கள் யாவரும் அமைச்சரவையில் இடம் பெறுவர்
(4) அமைச்சர்களை நியமிக்கும் பொறுப்பு பிரதமருடையதே.

33) இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியின் போது யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் நிர்வாகத்துக்கு எதிராக எழுச்சி பெற்ற தமிழ் மன்னன்?
(1) ஆரியச் சக்கரவர்த்தி (2) பரராசசேகரன்
(3) சங்கிலி மன்னர் (4) எதிர்மன்ன சிங்கன்

34) நாம் வாழும் பிரதேசத்தின் நிர்வாகத் தலைவர்?
(1) ஜனாதிபதி (2) பிரதேச சபைத் தலைவர்
(3) [illegible] (4) பிரதேச செயலர்

அம்பாறை,

# ஐ. தே. க. குழு மீது தாக்குதல் ஒருவர் பலி ஆறுபேர் கடும் காயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக் குழு மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றொருவர் அபாயகட்டத்தில் கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்துவிட்டு அக்கரைப்பற்று நோக்கிச் சென்றுகொண்டிருக்கையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றதாக தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும் ஐவர் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தைக் கண்டித்து, அக்கரைப் பற்று பொதுமக்கள் நேற்று கர்த்தால் அனுட்டித்தனர்.

(உ)

# அரசியல் கட்சிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## சோபித தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளை தவிர்க்கவேண்டுமானால் அரசியல் கட்சிகளிடம் இருக்கும் ஆயுதங்களை மீளப் பெற வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸநாயக்காவிடம் மாதுலுவாவே சோபித தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

இது வரை தேர்தல் வன்முறைகளின் போது மூவர் கொல்லப்பட்டும் 20 பேர் வரையில் காயமடைந்துமுள்ளனர்.

இதனை விட தாக்குதல் சம்பவங்களும் கொலைப் பயமுறுத்தல்களும் இடம்பெற்று வருகிறது.

தேர்தல் அதிகாரிகளுக்கு அரசியல் தலையீடின்றி பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரிடம் பிக்குகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ந-7)

# ஆறு சுயேட்சைகள் உட்பட 14 கட்சிகள் வேட்புமனுத் தாக்கல்

## பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் இறுதித்தினமான நேற்று முன்தினம் நண்பகல்வரை ஆறு சுயேட்சைகள் உட்பட பதினான்கு கட்சிகள் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

தெரிவு அத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான க. சண்முகநாதன் நியமனங்கள் யாவும் அனுமதிக்கப்பட்டுள்ளதென தெரிவித்ததுடன் சுயேட்சைகளுக்கான சின்னங்களையும் சுயேட்சைக் குழுக்களின் தெரிவினடிப் படையில் ஏற்றுக் கொண்டார்.

இதன்படி சுயேட்சைகளாக போட்டியிடும்.
த. வில்சன் - தோடப்பழச் சின்னம்
த. சுபத்திரன்-மீன் சின்னம்
வே. தங்கராஜா - தொலைபேசி
ஜெயக்கொடி-ஆமைப் பூட்டு
ஆ. சுல்தான் சுவையின்-முச்சக்கரவண்டி (ஓட்டோ)
என். ஸ்ரீக்காந்தா-கப்பல்

இதேவேளையில்யாழ் செயலகத்தில் நேற்று முன்தினம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெருமளவு பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது.

(ச-03)

# இயல்பு வாழ்க்கை திரும்பிய பின்பே பொதுத் தேர்தல் நடத்தவேண்டும்

(யாழ்ப்பாணம்)

உடனடியாக யுத்தத்தை

யும் கோரவேண்டும்:

''அனைத்து வேட்பாளர்

(1) ஜனாதிபதி (2) பிரதேச சபைத் தலைவர்
(3) கிராம சேவையாளர் (4) பிரதேச செயலர்

35) இலங்கையின் நிர்வாகத்தின் தலைவராக ஜனாதிபதி கொண்டு வரப்பட்ட ஆண்டு
(1) 1972 மே மாதம் 22ம் திகதி
(2) 1948 பெப்ரவரி 4ம் திகதி
(3) 1978 பெப்ரவரி 4ம் திகதி
(4) 1972 மே மாதம் 4ம் திகதி.

36) ஒரு நாட்டின் மொத்த வருமானத்தை சனத்தொகையால் பிரிக்கும்போது கிடைப்பது.
(1) தேசிய வருமானம் (2) தலா வருமானம்
(3) வாழ்க்கைச் சுட்டெண் (4) சென்மதி நிலுவை

A, B, C, D, E, F, G. என்னும் எழுத்துக்கள் ஒவ்வொன்றின் கீழும் ஒரு சோடிக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஒரு சோடியில் முதலாவதாகத் தரப்பட்டதன் அதிகரிப்பு இரண்டாவதின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு 37 -40 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A. மொத்தச்சனத் தொகை — ஆள்வீத நிலப்பரப்பு
B. பூச்சிக்கொல்லிகள் உபயோகம் — சூழல் மாசடைதல்
C. சுகாதார சேவைகள் விரிவாக்கம் — தாய்மார் இறப்பு வீதம்
D. மூலதனச் செறிவான முறைகள் உபயோகம் — வேலையின்மை
E. பண்டங்களின் ஏற்றுமதி — வெளிநாட்டு நாணய மாற்று
F. சனத்தொகை வளர்ச்சி வீதம் — சனத்தொகை இரட்டிக்கும் காலம்
G. பாடசாலைக் கட்டிடங்கள் — மோட்டார் வாகன விபத்து

37) முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பானது இரண்டாவதிலும் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதற்கு பொருத்தமான சோடி
(1) ABC (2) EFG (3) BDE (4) CDE

38) முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பானது இரண்டாவதில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் எனும் கருத்தைத் தரும் விடை
(1) ACF (2) BDE (3) EFG (4) CDE

39) முதலாவதில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு இரண்டாவதில் அதிகரிப்பு ஏற்படுத்தும் எனக் காட்டினாலும் நாட்டின் அபிவிருத்திக்குப் பயனுள்ளதாக அமைவது
(1) A (2) C (3) D (4) E

40) முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பு இரண்டாவதில் ஓர் வீழ்ச்சியை ஏற்படுத்தும் எனக் காட்டினாலும் நாட்டின் அபிவிருத்திக்குப் பயனுள்ளதாக அமையும் சோடி
(1) A (2) D (3) C (4) G

(யாழ்ப்பாணம்)

உடனடியாக யுத்தத்தை நிறுத்தி இயல்பு வாழ்க்கை திரும்ப ஆவன செய்த பின் பொதுத்தேர்தலை யாழ். மாவட்டத்தில் நடத்துவது பற்றி எம்மக்கள் சார்பாக தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர் அணியினரும் இணைந்து அரசையும் தேர்தல் ஆணையாளரையும் கோரவேண்டும்:

''அனைத்து வேட்பாளர் அணியினர்க்கும் அன்பான வேண்டுகோள்'' எனும் தலைப்பில் யாழ். மாவட்ட ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தனித்துவ வேட்பாளர் கனகசபை தேவதாசன் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்: [உ]

## சிங்கள அரசியல்வாதிகளுக்கு சுடலை ஞானம் பிறக்கிறது

(கொழும்பு)

தேர்தல் நெருங்கும்வேளையில் சிங்கள அரசியல் வாதிகளுக்கு சுடலை ஞானம்பிறப்பதாக தெரியவருகிறது.

இந்த வகையிலே 83 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் இடம் பெற்ற தமிழர்களுக்கெதிரான இனக் கலவரத்தினை ருகுணு மக்கள் கட்சி கண்டித்துள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் இறுதித்தினமான கடந்த திங்கட்கிழமை யாழ். வந்துள்ள ருகுணு மக்கள் கட்சி செயலாளர் மேற்படி கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இனக்கலவரத்தை தூண்டிவிட்டு இனவாதிகளோடு கூட்டாக தமிழ் மக்களை அநியாயமாய் பலியாக்கியதோடு, அவர்களது சொத்துக்களை சூறையாடவும் ஐக்கிய தேசியக் கட்சியே காரணமாக அமைந்தது.

இந்தச் செயல்களின் மூலம் சிங்கள இனத்தவர் அனைவரையும் இனவாதிகளாக கருதுதல் தவறு:

இந் நிலைப்பாட்டை நீக்கவே நாம் தற்போது யாழ். வந்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதேசமயம்,

இந்த எண்ணப்பாடு உரிய காலத்தில் ஏற்பட்டிருந்தால் இன்று உருவாகியுள்ள இன மோதல் சூழலே ஏற்பட்டிருக்காது என யாழ். மக்கள் பேசிக் கொள்வதும் தவிர்க்க முடியாததே;

(க-உ)

## இன்று ஒரு தகவல்

### உளம் சார்ந்த உடற் கோளாறுகள்

தாஜ்மகாலை விலைக்கு வாங்கலாம் என்று பார்க்கிறேன் என்றார் ஒருவர். நான் அதை விற்பதாய் இல்லை என்றார் இன்னொருத்தர்: தன்னைப் பற்றி தனக்கே ஒரு உயர்வான நம்பிக்கை இருக்க வேண்டியது அவசியம் தான். அதுக்காக இந்த அளவுக்குப் போவது என்றால் பார்க்கிறவர்கள் சந்தேகப்பட ஆரம்பிச்சிடுவார்கள்.

''நம்மாலே எல்லாம் முடியும்.'' என்று நினைக்கிறார் என்று சொன்னால் அதற்காக தாஜ்மகாலை விலைக்கு வாங்கவா நினைப்பது? மனவலிமை என்பது வேறு. வியாதிகளையெல்லாம் விரட்டுறதிற்கு மருந்து மட்டும் போதாது. மனவலிமையும் வேண்டும்.

இப்படி சொன்னால் நான் ஏதோ சம்பந்தம் இல்லாத இரண்டு விடயங்களை முடிச்சுப் போடுறதாக நினைப்பீர்கள். நடந்த கதையை கேளுங்கள்: அப்பத்தான் நம்புவீர்கள் ஸ்டீபன் ஜே குல்டு அப்படியென்று ஒரு அறிஞர்.

அவருக்கு வயிற்றில் ஒரு வகையான புற்றுநோய். மருத்துவர்கள் பாரித்தாரிகள். அவர் பிழைக்கிறது ரொம்ப கஸ்டம். ஏன் என்றால் இது மாதிரி உள்ள நோயாளிகள் 90 சதவீதம் ஒரு ஐந்தாறு மாதத்திற்குளளே செத்துப் போய் விடுவார்கள். அப்படியென்று சொல்லி விட்டார்கள். ஆனா அந்த அறிஞர் என்ன சொன்னார் தெரியுமா?

நான் ஏன் அந்த 90 சதவீதத்தில் ஒருவராக இருக்க வேண்டும்? 10 சதவீதத்தில் ஒருவராக தான் நான் இருப்பேன் என்று உறுதியாக சொன்னார். அந்த மனவலிமை அவரைக் காப்பாற்றி விட்டது.

இன்னொரு இடத்தில் ஒரு ஆய்வே பண்ணி பார்த்தார்கள். ஒரே மாதிரியான புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை இரண்டு பிரிவா பிரித்தார்கள்.

ஒரு குருப்புக்கு புற்று நோய்க்கானமருந்து எல்லாம் கொடுத்தார்கள். தீவிரமான சிகிச்சையிலே மனதோடபங்கு எந்தளவிற்கு இருக்கிறது தெரியுது இல்லையா? மனம் சம்மந்தப்பட்ட உடல்கோளாறுகளுக்கு என்றுசொல்லி புதுசாய் ஒரு தனிப்பிரிவு உண்டாகியிருக்கும்.

இந்தபிரிவிலே எந்தெந்த நோயெல்லாம் இருக்கு தெரியுமா? வயிற்றுப்புண், அரிப்பு தோலில்ஏற்படுகிற தடிப்பு நோய், படபடப்பு, ஒருபக்கத் தலைவலி, சில வகை பெருங்குடல் அழற்சி நோய் ஆஸ்மா, இதுமாதிரியான நோய்களுக்கும் மனதுக்கும் சம்மந்தம இருக்கு.

மனதோட தன்மையைப் பொறுத்தும்நோயாளி தனக்குள்ள வியாதிகளைப்பற்றி கொண்டிருக்கிற மனப்பான்மையைப்பொறுத்தும் வியாதிகளோடதன்மை மாறுபடுகிறது.

துயரம் அழுகையை வரவழைக்கவேண்டும். இல்லையென்றால் மற்ற உறுப்புக்கள் அழறாப்போல ஆயிடும் என்றார் 'மாட்ஸ்லே' என்னும் உளவியல்அறிஞர். சிலவகையான மூதுகுவலி வருவதற்கும். போவதற்கும்கூட மனது தான் காரணம் என்கிறார் 'ஜான்சார்னோ' என்னும் அமெரிக்க நிபுணர்ஒருவருக்கு ஆஸ்த்மா.

ரோஜாப் பூவை முகர்கிறப் போதெல்லாம் மூச்சிரைப்பு அதிகமாகிறது என்று அவர் கூறினார்.

ஒருடாக்டர் என்ன பண்ணினார்...ரோஜாப்பூ மாதிரியே உள்ளஒருகாகிதப் பூவை அவரிடம் கொடுத்து முகரச் சொன்னார் அப்பவும், அவருக்கு மூச்சிரைப்பு அதிகமாகிவிட்டது.

அவரை உளப்பகுப்பு ஆய்வு பண்ணினார்கள். கடைசியில் உண்மை தெரியவந்தது.

அந்த நோயளி, ரோஜாவுக்கும் அவர் உயிருக்கு உயிராக நேசித்ததாயின் சமாதிக்கும் நினைவுத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு அவதிப்படுகிறார்.

ஒருநோய் வந்துவிட்டால் முந்தின ஜென்மபாவம் அது தான் இப்ப அனுபவிக்கிறது என்று சொல்லிக்கொண்டு கஷ்டப்படாதீர்கள்.

நேற்றுக்கு.இன்றைக்குப்

# திருமுறைப் பண்ணிசையை வளர்த்த பெரும்பதி குப்பிளான்

## வேதாந்த குருபீடாதிபதி தெரிவிப்பு

[நல்லூர்]

''தேவாரம் வேதசாரம்'' என்ற அரும்பெரும் பொக்கிஷமான, சைவத் திருமுறையின் பெருமையை உணர்த்தும் நூலை ஆக்கிய காசிவாசி செந்திநாதையர் உதித்த குப்பிளான் பகுதியில் திருமுறைக்கு விழா வெடுப்பது மிகமிகப் பொருத்தமானதொன்றாகும். 20-ஆம் நூற்றாண்டில் ஈழத்திருநாட்டில் திருமுறைப்பண்ணிசையை வளர்த்த முதன்மையானவர்களுள்குறிப்பிடத்தக்கவரான இசைவல்லார் செல்வத்துரை பிறந்து தேவாரப் பண்ணிசைப்பணி புரிந்தபதியும் குப்பிளான்.

இவ்வாறு - குப்பிளான் கற்கரை விநாயகர் ஆலயத்தில் அண்மையில் சிறப்புற நடைபெற்ற திருமுறை விழாவின் போது வழங்கிய அருளாசியுரை நிகழ்த்தியகந்தர்மடம் ஸ்ரீசிவ குருநாத குருபீடம் வேதாந்த மடத்தின் குருபீடாதிபதி ஸ்ரீ மத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் கூறினார்.

திருமுறைச் செல்வர்களின் திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப் பெற்று விஷேட ஆராதனைகள் நடத்தப் பெற்று ஆரம்பமாகிய இத் திருமுறை விழாவின் போது மேலும் தமது அருளாசியுரையில், ஸ்ரீமத்சோமஸ்கந்த வேள் சுவாமிகள் குறிப்பிட்டதாவது.

வேதங்களை ஓதுகின்ற பொழுது அவற்றின் பொருள் விளங்கப் பயபக்தியுடன், இலட்சணங்களுடன் ஓதுதல் வேண்டும் இல்லாவிடில் பயனேதும் வாராது.

தேவாரத் திருமுறைகளை ஓதுகின்ற போது, பொருளுணர்வுடன், பண்முறை பிறழாதவண்ணம், பத்திமையாற் பணிந்து ஓதல் வேண்டும். இவற்றைச் சிந்தையிற் கொண்டு இறையருள் பெற்றுய்வோமாக.

செல்வி. குகனேஸ்வரன் மயூரதி (முதலாம் ஆண்டு மாணவி)தேவார இசைமணி அருளிசையரசு, தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தன் ஓதுவார், சங்கீதபூஷணம் மீசாலையூர் ஏ. கே. ஏரம்ப மூர்த்தி ஆகியோர் இத் திருமுறை விழாவில் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தினர்.

(க-103)

# பாலம்சேதம் மக்கள்சிரமம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு துறைமுகப் பாலம் சேதம் அடைந்திருப்பதனால் இப்பாலத்தினூடாகப் பயணஞ்செய்பவர்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

மேற்படி தீவிற்கு ஒரு துறை முகமே இருப்பதனால் பயணஞ்செய்வதில் மக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கையை விரைந்துஎடுத்தால் பொது மக்கள் பயமின்றிப் பயணம் செய்யமுடியும்எனத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

# நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

கடலில் குளிக்கச்சென்ற இருவர் நீரில் மூழ்கி இறந்து போனபரிதாப சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பேருவலைக் கடலில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் இறந்த இருவரின்சடலங்களும் மீட்கப்பட்டுள்ளது.

# யாழ். தேர்தல் களத்தில் பத்திரிகையாளரும் குதிக்கின்றனர்

(தென்மராட்சி)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அக்டோபர் 10ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும் 6 சுயேட்சைக்குழுக்களில் இருந்தும் மொத்தம் 240 வேட்பாளர்கள்களத்தில் நிற்கின்றனர்.

இவர்களில் புதிய இடதுசாரி ஐக்கிய முன்னணி, ஈ.பீ.ஆர்.எல் எவ், சுரேஸ் அணி) ஐக்கிய தேசியக் கட்சி, லிபரல் கட்சி மற்றும் வேல்முருகு தங்கராசாவின் சுயேட்சைக் குழு ஆகியவற்றில் இருந்து மொத்தம் ஆறு பத்திரிகையாளர்கள் இம் முறை தேர்தலில் குதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(க-77-03-43)

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 5 மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்த வேட்பு மனுக்களை தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் நிராகரித்தார்.

தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா ஒப்பமிடாததால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் கண்டி, மாத்தளை, வவுனியா, நுவரெலியா திருமலை ஆகிய மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(வ)

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மாணவருக்கான புலமைப் பரிசில் விரைவில் வழங்க நடவடிக்கை

## தலைவர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில், கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பெற்ற ஐவரும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்ற 13 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ் வைபவத்திற்கு புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமைபெற்ற மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள்

இன்னொரு இடத்தில் ஒரு ஆய்வே பண்ணி பார்த்தார்கள். ஒரே மாதிரியான புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை இரண்டு பிரிவா பிரித்தார்கள்.

ஒரு குருப்புக்கு புற்று நோய்க்கானமருந்து எல்லாம் கொடுத்தார்கள். தீவிரமான சிகிச்சை கொடுத்தார்கள்.

இருந்தாலும் அந்தநோயாளிகளுக்கு ஒரு அவநம்பிக்கையை உண்டாக்கிக் கொண்டேவந்தார்கள்; குணமடைவது கஸ்டம்தான் என்பது மாதிரி இன்னொரு குறாப்புக்கு புற்றுநோய்க்கான மருந்துஎன்றுசொல்லி சிலவற்றை கொடுத்தார்கள்.

ஆனால் அதுவெல்லாம் மருந்தேகிடையாது. அது அந்த நோயாளிகளுக்குத் தெரியாது: புற்றுநோய்க்குத்தான் மருந்துசாப்பிடறோம் என்று நினைத்துக்கொண்டு அதை சாப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால் அவர்களிடம் உங்களுக்கு நல்லகுணம் தெரிகிறது. மருந்துஎல்லாம் நல்லா உங்க உடம்பில வேலை செய்கிறது.

சீக்கிரத்துல சவுகரியமாகிவிடும்என்று சொல்லிக் கொண்டேவந்தார்கள். கொஞ்சநாள்கழித்து பார்த்தால் இந்த குறாப்லேதான் நோய் சீக்கிரமாய் குணமாகிறது தெரிந்ததாம். இதிலிருந்து என்னதெரியுது? மருத் நேசித்ததாயின் சமாதிக்கும் நினைவுத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு அவதிப்படுகிறார்.

ஒருநோய் வந்துவிட்டால் முந்தின ஜென்மபாவம் அதுதான் இப்ப அனுபவிக்கிறது என்று சொல்லிக்கொண்டு கஷ்டப்படாதீர்கள்.

நேற்றுக்கு.இன்றைக்குப் பரவாயில்லை. நான் குணமடைந்து கொண்டு வருகிறேன்.அப்படியென்றுதினமும் சொல்லிக்கொண்டு வாங்க. இந்த தற்கருத்தோற்றம்நல்ல பலனைக் கொடுக்கும்.நல்லெண்ணம், தன்னம்பிக்கை, வாழ்க்கையிலே ஒருபிடிப்பு குறிக்கோள் ,அன்பு,துணிவு, தன்வலி அறிகிறது;இதுவெல்லாம் மனது நமக்குக் கொடுக்கிறமாமருந்துகள் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். நம்பிக்கையில்லாமலேயே டாக்டர்களிடம் போனால் வியாதி எப்படிசார் குணமாகும்?

ஒருத்தர் அப்படித்தான் டாக்டர் வீட்டுவாசல் வரைக்கும் போய்விட்டு திரும்பி வந்தார்.என்ன என்று விசாரிச்சு எனக்கு டாக்டர்மேல் நம்பிக்கை இருக்கு.ஆனால் அவருடைய பெயரை, போர்டுல பார்த்ததும் என் மேலே நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.அதுதான் திரும்பி ஓடி வந்து விட்டேன் என்றார்.

அப்படி போர்டுல என்ன தான் எழுதியிருந்தார்கள் என்று பார்த்தீர்கள்.

''கைலாசம்'' என்று எழுதியிருந்தது.

-தென்கச்சிசுவாமிநாதன்

## மரணம்

(கொழும்பு)

கடலில் குளிக்கச்சென்ற இருவர் நீரில் மூழ்கி இறந்து போனபரிதாப சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பேருவலைக் கடலில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் இறந்த இருவரின்சடலங்களும் மீட்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் இதே இடத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் கண்டியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(உ)

## மலர் வெளியீடு திகதி மாற்றம்

யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர் க.தேவராஜாவின் 50 ஆவது அகவை நிறைவையொட்டி இவ்வருடம் 10 ஆம் திகதி வெளியிடப்படவிருந்த மலர் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படுமெனபல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(த)

## விசேட சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் விசேட நிகழ்வுகளில் இன்று புதன்கிழமை''ஞான மொழி பேசுமுகம்'' என்னும் தலைப்பில் அருட்கவி சி.விநாசித்தம்பி சொற்பொழிவாற்றவுள்ளார்.

(செ)

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில், கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையிலும் அதி கூடிய புள்ளிகளைப்பெற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் விரைவில் நடைபெறவுள்ளது என ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நல்லூர் பிரதேசசபைத் தலைவருமான க. மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

இவ்வாண்டு வழங்கவுள்ள புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ள நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த க.பொ.த.உயர்தர பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற ஐவரும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்ற 13 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்;

இவ்வைபவத்திற்கு புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமைபெற்ற மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் உட்பட சபை உறுப்பினர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொளவார்கள்.

சென்ற வருடம் நடைபெற்ற இப் புலமைப் பரிசில் வழங்கும்வைபவத்தின்போது, தகுதி பெற்ற 3 க.பொ.த உயர்தர மாணவர்கள் மற்றும் 3 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயரில் தலா 8 ஆயிரம் ரூபா விதம் வங்கியில்வைப்பிலிட்டு, வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டமை அறிந்ததே. (க)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 ஆயிரத்து 808 பேர் மட்டும் நிரந்தரக் குடிகளாக பதிவு

-(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது வசித்துவரும் 45 ஆயிரத்து 374 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 84ஆயிரத்து 655பேரில் 33 ஆயிரத்து 808 பேர் மட்டுமே அங்கு நிரந்தரக்குடிவாசிகளாக இருப்பதாகவும் ஏனையோர் பல்வேறு இடங்களிலும் இருந்து இடம் பெயர்ந்து வசிப்பதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 74 ஆயிரத்து 677 பேர் யாழ். மாவட்டத்தில் இருந்தும், 12 ஆயிரத்து 821 பேர்கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தும் 8 ஆயிரத்து 512 பேர் திருகோணமலை மாவட்டத்தில்இருந்தும்ஏனையோர் மன்னார், மட்டக்களப்பு. வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

(உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



## உகண்டாவில் அரைகுறை ஆடையுடன் வாழும் மிக உயரமான மனிதன்

(கம்பாலா)

உகண்டாவில் அரைகுறை ஆடைகளுடன் ஜோன் ஒபி வோனா என்பவர் வாழ்ந்து வருகிறார்.

8 அடி 2 அங்குல உயரமான இவர் அந்த நாட்டின் மிக உயர்ந்த மனிதராகக் காணப்படுகிறார்.

மிகவும் பின்தங்கிய வசதிகள் குறைந்த கிராமத்தில் வாழும் இவருக்கு அளவான ஆடைகள் தைப்பதற்கு ஆட்கள் இல்லை. அளவான காலணிகள் கிடைக்காது.

இவர் தாய் தந்தையருடன் நிற்கும்போது மிகவும் விசித்திரமாக இருக்கும். (து)

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஈழத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் கரை சேர்ந்தனர்,

(சென்னை)

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து இராமேஸ்வரம் நோக்கிச் சென்ற ஐவரில், இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் வந்து சேர்ந்திருப்பதாக இராமேஸ்வரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிறு அன்று இராமேஸ்வரத்தை சென்றடைந்த இவர்களில், காயமடைந்த சத்தியரூபன் (வயது-22, விசுவமடு) அர்ச்சுணராஜா (வயது-23, யாழ்ப்பாணம் ஆகிய இருவரும் மருத்துவ சிகிச்சை மனையில் அனுமதிக்கப்பட்டு பெற்று வருகின்றனர்.

ஏனையோர் பொலிஸ் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இப்பொது மக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகக் காரணம் என்ன என்பதுபற்றி எதுவும் தெரியவில்லை. (உ)

## பயங்கரவாதத்தை எதிர்த்து பிரித்தானிய - இந்திய உடன்பாடு

(புதுடில்லி)

பயங்கரவாதத்திற்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்குமுகமாக பிரித்தானிய அமைச்சர் கஸ்கோ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஒரு வாரகாலம் இங்கு தங்குவார் என்றும் அவ் வேளையில் இந்திய அமைச்சர்களையும்மற்றும் அதிகாரிகளையுஞ் சந்தித்துப் பேச்சு நடாத்துவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது பயங்கர வாதத்தை எப்படி இல்லாமல் செய்வது, எப்படி தடுப்பது போன்றனபற்றியும் இருதரப்புப்பேச்சுக்கள் நடைபெற இருப்பதாகவும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## இந்தியாவில் நாசவேலை புரிய பாகிஸ்தானியர் பலர் ஊடுருவல்

இந்தியாவிற்கெதிரான வன்முறை நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடும் நடவடிக்கையில் பாகிஸ்தான் முனைப்பாக ஈடுபட்டு வருவதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இதனை உறுதி செய்யும் வகையில் வெடிபொருட்கள், ஆயுதங்கள், போதைவஸ்துகள் என்பவற்றை இந்தியாவிற்குள் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட பாகிஸ்தானியர் பலர் ஒரு சில தினங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து பஞ்சாப் வழியாக வெடிபொருட்கள், போதைப் பொருட்கள், கள்ளநோட்டுகள் என்பவற்றை புதுடில்லிக்கு எடுத்துச்செல்ல முயன்ற 3 பாகிஸ்தானியர்களை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் ஒரு சம்பவத்தில், பாகிஸ்தானில் இருந்து நேபாளம் வழியாக 35 கிலோ ஆர்.டி.எஸ். வெடி பொருட்களை இந்தியாவிற்குள் கொண்டுசெல்ல முனைந்த பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இவ்வாறான பலர் இந்தியாவிற்குள் நுழைந்திருப்பது உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது. (உ)

## உலக அமைதியை நாடி ஐ.நா. சர்வமத மகாநாடு

### ஒரு கருத்துக் கண்ணோட்டம்

(நியூயோர்க்)

உலக அமைதிக்கான உச்சி மகாநாடு நியூயோர்க்கில் கடந்த வாரம் நடந்தது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இம் மகாநாட்டில் ஐ.நா. பொதுச்செயலர் கோபி அனன் உரை நிகழ்த்தினார்.

1600க்கும் மேற்பட்ட மதத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

உலக தரிசனம்

உச்சி மகாநாட்டின் முடிவில் உலக அமைதிக்கான உடன்படிக்கையொன்றும்எட்டப் பட்டது.

இந்த மகாநாட்டின் சிறப்பு அம்சம் பற்றிக் கூறவேண்டுமென்றால இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்தவம் பகாய், ஜெயன மதம் கொன்பூசியஸ் மதம், சீக்கியம் போன்ற பல்வேறு மதத் தலைவர்களும் ஐ.நா. பொதுச் சபையை அலங்கரித்தனர்.

இந்தியாவிலிருந்து 103 மதங்கள் மற்றும் சமயங்களைச் சார்ந்த 250 பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

திபெத்தைச் சேர்ந்த பௌத்த மத தலாய்லாமா இம் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வணக்கங்களுடனும் ஆசீர்வாதங்களுடனும் ஆரம்பமான முதல் நாள் நிகழ்வில் மதங்களுக்கிடையே பரஸ்பரம் மதிப்பையும் ஒற்றுமையையும் வலியுறுத்தியது.

அத்தோடு ஒருமை காத்து மன்னிக்கும் மனப்பாங்குடன் பொறுமை காப்பதாக அமைந்திருந்தது.

இரண்டாம் நாள் கூட்டத்திற்கு இந்தியாவிலிருந்து சென்ற இந்துஜென் தலைமை வகித்தார்.

அமைதியின் தூதரான அண்ணல் காந்தியின் கொள்கையைப் பின்பற்றிய அகிம்சை தான் ஒரேவழி என வலியுறுத்தப்பட்டது.

பெண்கள் கூடுதலாக கலந்து கொண்ட இக் கூட்டத்தில் மகாத்மாகாந்தி அடிகளின் எல்லாக் காந்தி ஏழை நாடுகளின் கடன் சுமைகளைத் துடைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனன் தனது தொடக்கவுரையின் போது மத வெறிக்கும் சமய சகிப்புத்தன்மையின்மைக்கும் இடமளிக்கக் கூடாது என்றார்.

உச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட சமயத் தலைவர்கள் பரஸ்பர நம்பிக்கையோடு ஒத்துழைத்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்று சொன்னார்.

இந்திய மேலவை உறுப்பினர் இதில் கலந்து பேசுகையில், மத சமுதாயத்துக்கு சேவை செய்வது மதங்களும் சமயங்களும் தான் என்றால் அவைகள் ஒன்றைமற்றொன்று புரிந்து கொள்ள வேண்டும்; வறுமையை ஒதுக்கபாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மகாநாட்டு முடிவில் அணுவாயுத உள்ளிட்ட ஆயுதங்களை ஒழிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் சமயத் தலைவர்களின் உதவியை நாடியுள்ளது. (து)

## அவுஸ்திரேலியாவில் விமான விபத்து 8 பேர் கோரமாக பலியாகினர்

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

ஒதுக்குப்புறமான பெருவெளி ஒன்றில் ஏற்பட்ட இவ் விபத்தில் அதில் பயணம் செய்த அனைவரும் இறந்திருப்பதாக மீட்புப் பணியாளர் உறுதிசெய்துள்ளனர்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக தரையுடன் மோதியதனாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது. (உ)

## பரிஸ் விமான விபத்துக்கு காரணமான உலோகத்துண்டு கண்டெடுப்பு

(பரிஸ்)

கடந்த ஜூலைமாதம் பரிஸ் நகரில் இடம்பெற்ற கொன்கோட் விமான விபத்தில் அதன் ரயர் வெடித்துப் போக காரணமாகவிருந்தது என நம்பப்படும் பெரிய உலோகத்துண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டு புலன் விசாரணைத்துறை அதிகாரிகள் இதனைக் கண்டெடுத்துள்ளனர்.

மேற்படி கொன்கோட் விமான விபத்தில் அதில் பயணம் செய்த 113 பயணிகள் மரணமடைந்தது தெரிந்ததே. (உ)

## மதுபானமும் கருவாடும் பெற்று போலிச் சான்றிதழ் வழங்கிய பாடசாலை அதிபருக்கு சிறைவாசம்

ஏற்குள் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட பாகிஸ்தானியர் கைது செய்துள்ளனர்.

மேலும் ஒரு சம்பவத்தில்,

ருப்பதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது. (உ)

# சட்டப்பேரவையில் அமளிதுமளி
# ஆளும்-எதிர்க் கட்சிகள் கைகலப்பு

(புதுடில்லி)

அஸாம் மாநில சட்டப்பேரவையில் நேற்று கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

சபைக்கூட்டம் நடைபெறுகையில், அவையின் அட்டவணைக் குறிப்புகளை சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் சில்வூஸ் கோன்வாங் குறை கூறிப் பேசியதையடுத்தே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

சி. பி. ஐ. எம். உள்ளிட்ட வேறு கட்சி உறுப்பினர்கள் பலர் கோன்வாங்கின் நடத்தையை குறைகூறிப்பேசினர்.

இதனையடுத்து இருக்கையைவிட்டு எழுந்துசெல்லுமாறு காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு சபாநாயகர் கட்டளையிட்டார்.

இச்சம்பவத்தினால் ஆத்திரமுற்ற காங்கிரஸ் கட்சியினர் அவையின் மையப் பகுதிவரை விரைந்துசென்று சபாநாயகர் முன் இருந்த மைக்கைப்பிடுங்கினர்.

இதனால் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது.

இவற்றை எல்லாம் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில்சபாநாயகர் அமரிவை 10 நிமிடம் ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவைக்குள் செல்லவில்லை எனத் தெரியவந்துள்ளது. (உ)

## செய்திப்பரல்

★ நீரிழிவினால் பாதிக்கப்பட்டோர் இந்தியா, சீனா அமெரிக்கா ஆகிய நாடுகளில் கூடுதலாக இருக்கிறார்கள்.

★ செப்ரெம்பர் 5ம் திகதியான நேற்று இந்தியாவில் மட்டும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.

★ வெளிசுளை நாட்டிற்கு இந்தியப் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

★ பிரதமர் வாஜ்பாய் ஐ.நா புத்தாயிரமாம் ஆண்டுக் கூட்டத்தில் பேசுவார்.

★ மகாராஷ்டிராவில் 30 விநாடிகள் நிலநடுக்கம் நீடித்தது. (து)

# பாடசாலை அதிபருக்கு சிறைவாசம்
## ரஷ்யாவில் சம்பவம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் ஒரு பாடசாலை அதிபருக்கு போலி டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கியதற்காக 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வல்காகிராத் பாடசாலை அதிபர் மதுபானம், கருவாடு ஆகியவற்றை கையூட்டாகப் பெற்றுக் கொண்டு போலிச் சான்றிதழ்கள் வழங்கியதாகத் தொடரப்பட்ட வழக்கிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. (து)

## இருவர் பலி

இந்தியாவின் இமாசலப் பிரதேசத்தில் மேற்கு உலக உல்லாசப் பயணிகள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் நடைபெற்றுள்ள இக் கொலைச் சம்பவம் உல்லாசப் பயணிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (து)

### இந்திய - பாகிஸ்தான் விவகாரத்தில்
# மத்தியஸ்தம் வகிப்பதற்கு
# அமெரிக்காவிற்கு தகுதி இல்லை
## பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய - பாகிஸ்தான் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்க அமெரிக்காவிற்கு எந்தவித உரிமையும் தகுதியும் இல்லை என்று அட்டல் பிஹாரி வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

கார்கிலில் நம்பிக்கை விரோதமான முறையில் செயற்பட்ட பாகிஸ்தான் நம்பிக்கையுடன் செயற்பட்டால் பேச்சுவார்த்தை தொடருமென்று தெரிவித்தார்,

வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த வாஜ்பாய் இந்தியாவும், அமெரிக்காவும் இயல்பான தோழமை நாடாக விளங்குவதற்கு ஏற்ற தகுதிகளைக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்,

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் இந்திய வரவிற்குப் பின் நல்ல உறவுகள் ஒத்துழைப்புகள் வளர்ந்திருக்கின்றனவென்றார் பிரதமர் வாஜ்பாய். (து)

தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு.

- குறள் -

# வலம்புரி

## கற்றனைத் தூறும் அறிவு

வள்ளுவன் வாய்க்கு சருக்கரை இடவேண்டும். அந்த வார்த்தைகளை ஏற்று அதிரடி வேகத்தில் அறிவுப் பசிக்கும் இரை தேடும் பீடாதிபதியையும் அவர் சார்ந்தோரையும் பாராட்டாமல் இருக்க முடியாது. அண்மையில் மலர்ந்த அறிவுச் சோலை தேசியகல்வியியற் கல்லூரி. இதன் வளர்ச்சிக்கு கணந்தோறும் கரிசனை கொள்ளும் பீடாதிபதி சமூகநலன்பேணும் உழைப்பாளியெனலாம். நல்லாசிரியர்களை உருவாக்கும் பணி தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உண்டு. அவர்கள் வல்ல, நல்ல வளம்மிக்க மாணவர்களை உருவாக்க உதவுவார்கள், ஆதலால் சமூகம் மேம்படும்.

அறிவுப் பசிக்கு அரிய பெரிய நூல்கள் தேட்டமாக்க வேண்டும். அதற்கான ஊகமும் உத்தியுமே பீடாதிபதி கையாண்ட நூலக வாரம், அறிவை வளர்க்க யாசித்தல் பெரும் புண்ணியமெனலாம். மக்களிடை வலம் வந்து நூல்களைச் சேகரிக்கும் உத்தி மெச்சத்தக்கது.

வள்ளன்மைமிக்க மக்கள் ஆளுக்கொரு நூல் அன்பளிப்புச் செய்தால் நூலகம் நூல்களால் நிரம்பி வழியும். யாழ். நூலகம் தென்இழக்காசியாவில் சிறந்ததொன்று எனச் செப்பக் கேட்டிருக்கிறோம். தாவீது அடிகள் யாழ். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தி கேட்டு உயிர் துறந்த செய்தி உண்டு. நூலொடு நுவன்ற பெரியோன் அவர்.

ஒரு கல்விக் கூடத்தின் அறிவுச் சுரங்கம் நூலகம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்கான வழிமுறைகளை தேடலும், நாடலும் நிர்வாகிகளின் நிலைப்பாடாக வேண்டும். அடையா நெடுங் கதவாய், அஞ்சலென்ற சொல்லோடு நூல்களை உவந்தளிக்க கற்றோரும் மற்றோரும் முன்வர வேண்டும்.

வளமான கட்டடத் தொகுதி எழும்புகின்ற போது நூலகம் ஒன்று பூரண பொலிவோடு திகழ வேண்டும். யாழ். நூலகத்தினை ஒத்த தரத்தில் எழுச்சிபெறுமாயின் செய்பணி காலம்காலமாக நினைவுகூரத்தக்கதாய் அமையும். அப்பணி பாராட்டத்தக்கதாகவும் இருக்கும். முயற்சித் திருவினை முற்றுப் பெற, வள்ளன்மை வாய்ந்த கரங்கள் கொடுத்துச் சிவக்கட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# ஐ.தே.க.வுடனும் விடுதலைப் புலிகளுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தொடர்புண்டு

### அமைச்சரின் கூற்றை மறுக்கும் கூட்டணி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி ஐக்கிய தேசியக்கட்சியுடனும். விடுதலைப் புலிகளுடனும் நெருங்கிய கூட்டு வைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா கூறியிருப்பது வேடிக்கையானது மட்டுமல்ல கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தினம் தினம் செத்துப்பிழைக்கும் ஏழைத் தமிழ்மக்கள் தமது சொத்து, சுகங்களை இழந்து- இடம்பெயர்ந்து, நல்மனம் படைத்தோரின் வீடுகளிலும், பிற வீட்டுக் கோடிகளிலும் அகதி முகாம்களிலும் அடிப்படைத் தேவைகள் கூடக் கிடையாது அல்லலுறுகின்றனர்.

இம்மக்கள் உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டுமென்றே குரல் கொடுக்கின்றார்கள்:

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் களத்திலே பலியிடப்படுகின்றதுஎன்றால்அது யாரின் நன்மைக்காக?

மக்களின் அபிலாசைகளை உணராது தம்பதவிகளை மட்டும் எப்படியும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற சுயநலப் போக்குடைய எஸ்.பி. திஸநாயக்க போன்றோர்களுக்காகவே என்பதே உண்மை.

**குண்டுச் சத்தம்**

எஸ்.பி. திஸநாயக்க போன்றோர் ஒரு தடவை யாழ்ப்பாணம் விஜயம் செய்தால் மக்கள் படும் துன்பம் துயரங்களை உணரமுடியும். இங்கு கேட்கும் சத்தங்கள் எல்லாம் குண்டுகள் வெடிக்கும் சத்தங்களேயாகும். பீதியுடன் வாழும் மக்களுக்கு எஸ்.பி திஸநாயக்கா கொடுப்பது வெறும் சமுர்த்தி நியமனங்களே. தமிழர்கள் வேறு பதவிகள் வகிக்க தகுதியற்றவர்கள் என்பதே அவரின் எண்ணமாகும்.

தமிழ் மக்களால் அரசின் தீர்வுத்திட்டம் நிராகரிக்கப்பட்டமைக்கு உரிய காரணம் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அமைய இத்தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படாமையேயாகும். இத்திட்டம் நாட்டுப் பிரிவினையை ஏற்படுத்தும் என்ற பொய்க்காரணம் காட்டியே ஐ.தே. கட்சி, நிராகரித்தது.

உண்மை இவ்வாறிருக்க ஐ.தே. கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய கூட்டு என எஸ். பி. திஸநாயக்க கூறுவது விஷமத்தனமானதாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு - யுத்தம் நிறுத்தப்படவேண்டும்' விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட வேண்டும் அவர்களும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதே யாகும். இது உலகறிந்த உண்மை.

**கூட்டு வைக்கவில்லை**

நாம் யாருடனும் கூட்டு வைக்கவில்லை மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற வகுப்புவாதக கட்சியோடு கூட்டுவைத்துக் கொண்டு தமிழ் மக்களை ஒரு வர்த்தகப் பொருளாகக் கருதிக் கொண்டு அரசியல் வியாபாரம் நடத்தும் சில தமிழ்க் குழுக்களை ஊன்று கோலாக வைத்துக் கொண்டு ஒரு இலட்சியத்துடன் அன்று தொட்டு இன்றுவரை பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் வலையில் சிக்காமல் தனித்து நின்று போராடிவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சிக்கும் தகுதி எஸ். பி திஸநாயக்காவிற்கு உண்டு என நாம் நினைக்கவில்லை.

நாம் இழந்தவை பல மாறி மாறி வந்த அரசுகள் நம்மக்களுக்கு இழைத்த கொடுமைகள துன்பங்கள் சொல்லில் அடங்காதவை:

**சமுர்த்தி நியமனம்**

எஸ்.பி. திஸநாயக்கஅவர்கள் வள்ளல்போல வாரி வழங்கும் சமுர்த்தி நியமனங்கள் நிலைக்குமா? என்றும், 5 ஆண்டுகளுக்கு முன்பே தென்னிலங்கையில் வழங்கப்பட்ட இப் பதவிகள் தமிழ் வாலிபர்களுக்கு காலம் தாமதித்து வழங்கப்படுவதன் உட்காரணம் என்ன? என்றும் தமிழ் வாலிபர்கள் கேட்கின்றார்கள். தரகர்களை வைத்து நியமனங்களை வழங்குவது தேர்தல் காரணமாகத்தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.

காலம் தாமதித்து வீசப்படும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி எடுக்குமளவிற்குத் தமிழ்ச் சமுதாயம் ஏமாளிகளல்லர். ஆனால் உரிய நேரத்தில் உரிய பாடத்தை அரசிற்கும், அமைச்சருக்கும், அரசியல்வியாபாரிகளுக்கும் தமிழ்ச் சமுதாயம் போதிக்கும் என்பது உறுதி.

எஸ். பி. திஸநாயக்க அவர்கள் விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கலாம். விளையாட்டுப்பிள்ளையாக இருக்கக் கூடாது. எதையும் விளையாட்டுத் தனமாக எடுக்காமல் பேச்சிலும் செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது சிறந்ததாகும்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

(க)

# தமிழ்த் தேசிய போராட்டத்திற்கு வடபகுதிமுஸ்லிம்களின் ஆதரவுண்டு

### அகமட் சுல்தான் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ் தேசிய போராட்டத்திற்கு கடந்த 10 வருடத்திற்கு முன்பே வட பகுதி மக்கள் பூரண ஆதரவை வழங்கினர். எமது வெற்றிப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும்.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர் அகமட் சுல்தான் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

வட பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் சார்பாக அமைக்கப்பட்ட இவ் அமைப்பின் சார்பில், மொகமட்ரமீஸ், சாவூல்கமீட் கையூர், முகமட் காசீம் ஆகியோரும் நேற்றையபத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

செயலாளர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் உறவை வளப்படுத்தி ஒன்றுபட்ட போராட்டத்திற்கு அடித்தளமிடுதல், தமிழ்தேச மக்களதும் அகதிகளினதும் நல்வாழ்விற்கு உழைத்தல் என்பனவே எமது குறிக்கோள்களாகும்.

1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது அமைப்பு கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதை தீர்த்து வைக்க வேண்டிய அரசியல்வாதிகளை மக்கள் நம்பி ஏமாற்றமடைந்துள்ளனர்:

எனவே அரசியல் குறிக்கோளற்ற எம்மை மக்கள் கட்டாயப்படுத்தியதின் அடிப்படையிலேயே நாம் இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். எனவே மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் பலவும் எம்மை அணுகியபோதிலும் நாம் அவர்களின் கோரிக்கைகளை நிராகரித்துவிட்டோம்:

வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோதும் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவை மேம்படுத்தும் நோக்கிலும், முஸ்லிம் மக்களுக்கான நஷ்டஈடுகள் மற்றும் அவர்களுக்கெதிரான உரிமைமீறல்களுக்கு எதிராகவும் எமது அமைப்பு பாடுபட்டுவந்தது.

முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு குறித்து அவர் தெரிவிக்கையில், முஸ்லிம் காங்கிரசின் தனித்துவமான சிந்தனையும் பிரதேச ரீதியானதும் இனரீதியாகவும் அவர்களின் பேச்சுக்களும் தான் முஸ்லிம் மக்களின் துன்பத்திற்குக் காரணம்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கென யு. என். எச். சி. ஆர். அமைப்பால் வழங்கப்பட்ட 400 கோடி ரூபாவின் பெரும்பகுதி கிழக்கு மாகாணத்திற்குதான் செலவு செய்யப்பட்டது.

இடம்பெயர்ந்த முஸ்லிம்களை பொறுத்தவரை தமது சொந்த இடத்திற்குச் சென்று வாழவேண்டுமென்று எதிர்பார்ப்புடனே இருக்கின்றார்கள். ஆனால் நாம் எவ்வாறு வெளியேற்றப்பட்டோமோ அதேபோல உரியவர்கள் எம்மை மீண்டும் பகிரங்கமாக அழைக்க வேண்டும்.

மக்களின் மீள்குடியேற்றத்திற்கு நிரந்தர சமாதானம் வேண்டும். அத்தகைய சமாதானம் நிலைநாட்டப்படும் பட்சத்திலேயே மக்கள் மீள்குடியேற்றம் சாத்தியம் எனவும் தெரிவித்தார். (க-3)

## அடிக்கல் நாட்டல்

கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலைய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நல்லூர் பிரதேச சபைத் தலைவரால் நாட்டப்பட்டது.

மேற்படி கட்டடம் சேதமடைந்த சிறியகட்டடத்தில் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# சுயமுயற்சியில் ஈடுபடுவோருக்கு கடன்கள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடலில்சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோருககு கடன் உதவிகள வழங்கப்பட்டதையடுத்து அப்பகுதிமக்கள் பெருநலமை அடைந்துள்ளதாக புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் தி.நா.செந்தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்;யு.என்.எச்சீ.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் புளியங்கூடல் கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் கடந்த ஆண்டு 50சுய தொழிலாளர்களுக்கு தலா 10 000 ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது.

அக்கடனுதவி வழங்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறி வருவதுடன், கடன் மீளளிப்பும் சீராக இடம் பெறுகிறது.

அத்துடன் புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்க எல்லைப்பரப்பிற்கு உட்பட்ட சுயதொழிலில் ஈடுபடும் 55பயனாளிக்கு கடனுதவி இவ்வருடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இக்கடனுதவி குறைந்தளவு வட்டியுடன் அறவிடப்படுவதால் பலசுய தொழிலாளர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(த-75)

# ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர் இலங்கையர்கோன்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் மூத்த எழுத்தாளர் இலங்கையர் கோனின் நினைவுதினம் இன்றாகும்.

ஏழாலையைச் சேர்ந்த சிவஞான சுந்தரம் என்ற பெயர் கொண்ட இலங்கையர் கோன் பல வானொலி நாடகங்களையும், சிறு கதைகளையும் எழுதியுள்ளார் ஈழத்து சிறு கதை முன்னோடிகளில் ஒருவர் எனக் கருதப்படும் இவர் பகுதிக் காரியதிகாரியாகச் சேவையாற்றியவர் வெள்ளிப்பாதசரம் இவரது சிறுகதைத் தொகுதியாகும்.

இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் பலராலும் போற்றப்பட்ட சிறுகதையாகும். (து)

யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# அ. இ. தமிழ்க் காங்கிரஸ் கொழும்பிலும் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டி இடுவதற்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி கொழும்பு மாவட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் ந. குமர குருபரன் தலைமையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டத்தரணி கே. சிவநாதன் தலைமையிலும் வேட்புமனு தாகக்ல் செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிறின்ஸ் காசிநாதரும் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களின் விபரம் வருமாறு.

★ கலாநிதி இ. நடராசா முன்னாள் ஐ நா. சபை ஆலோசகர்)

★ சட்டத்தரணி திருமதி ஜோய் மகிழ்மகா தேவன்

★ சட்டத்தரணி கே. இல்லைநாதன்

★ வைத்திய கலாநிதிமகேந்திரராசா

உட்பட 23 பேர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் (வ)

## 6 ஆசனத்துக்கு 216 பேர் போட்டி

(வவுனியா)

வன்னிமாவட்டத்தில் ஆறு பாராளுமன்ற ஆசனங்களுக்கு 216 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளதாகத் தெரியவருகிறது. (வ)

### பாராளுமன்றத்திற்கு...

ஆட்சிப் பீடமேறிய சந்திரிகா கடந்த ஆறு வருடங்களாக எதையும் செய்யவில்லை.

ஆனால் நாம் எந்தவொரு சலுகையையும் எதிர்பார்த்து இத் தேர்தலில் போட்டியிடவில்லை,

இன்று மக்களை வதைக்கும் அவசரகாலச் சட்டம் உட்பட யுத்த வழிமுறைகளை கட்சி வழிகாட்டலினூடாக எதிர்ப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி பிரச்சினையைத் தீர்க்கவுள்ளனர். புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு எமது பாராளுமன்ற உறுப்பினர் பதவி தடையாக அமையுமாயின் அப்பதவியை உடனேயே நாம் துறக்கவும் தயாராகவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ந-3)

### தேர்தலில்...

யுமில்லை என்றும் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்கு அறவே இல்லை என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதேவேளை லண்டன் கேம்பிறிட்ஜ்பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 14 ஆம் திகதி அவர் லண்டன் பயணமாகவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

### மக்களைக்...

களை விட்டு வெளியே வந்து தெருவோரங்களில் நின்று ஆகாயத்தைப் பார்த்ததையும் நிலத்தில் வீழ்ந்து பாதுகாப்புத் தேடியதையும் அவதானிக்க முடிந்ததுடன் பயப்பீதியுடன்மக்கள்காணப்பட்டதாகவும் எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்

குண்டுவீச்சு விமானங்களை அடுத்து இராட்சத ஹெலிகள் இரண்டு மிகவும் தாழப் பறந்து யாழ் நகரை வலம் வந்தபோது காங்கேசன் துறைவீதி பலாலி வீதிகளில் சென்றோர் தலையில் அணிந்திருந்த தொப்பிகள் ஹெலியின் வேகக் காற்றினால் தூக்கி எறியப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை நேற்று யாழ் நியோகுப்பிள்ளை வீதி திருநகர்ப் பகுதிகளில் பரவலாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததனால் மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

இக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் ஷெல் தாக்குதல், ஹெலி தாக்குதல் சம்பவங்களின் போது எவருக்கும் சேதம் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. (வ)


**கஜன்**

திரை

வர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி

ஜனகராஜ், குஷ்பு

நடிப்பில்

**கிழக்கு வாசல்**

காட்சி நேரம்

பி.ப 2.30 மணி

(இ-652)



**ஸ்ரீ செல்வா**

[யாழ்ப்பாணம்]

பிரபுதேவா மீனா

நடித்த

**டபிள்ஸ்**

CD புதிய பிரதி

காட்சி நேரம்

10-30, 2-00 (ப.தே)

[இ 688]


ஜனாதிபதியை அவமதித்ததிற்காக

# சண்டேலீடர் ஆசிரியருக்கு 2 வருடங்கள் சிறைத் தண்டனை

(கொழும்பு)

ஜனாதிபதியை அவமதிக்கும்விதத்தில் கட்டுரை பிரசுரித்தமைக்காக சண்டேலீடர் பத்திரிகை ஆசிரியர் வஸந்த விக்கிரமதுங்க குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

கொழும்புமேல் நீதிமன்றநீதிபதி அலுருசோவனச 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடசிறைத் தண்டனையை விதித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி சண்டேலீடர் பத்திரிகையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சம்பந்தமான கட்டுரை ஒன்று பிரசுரமாகியிருந்தது.

இக்கட்டுரை ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாக கூறி சட்டமா அதிபர் சண்டே லீடர் பத்திரிகைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

நாட்டின் தலைவருக்கு எதிராக பத்திரிகையைப் பயன்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரிலேயே பத்திரிகை ஆசிரியருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பை எதிர்த்து சண்டே லீடர் ஆசிரியர் வஸந்த விக்கிரமதுங்க உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளார். (உ-வ)

### அரச...

இதனையடுத்து அடுத்தமாதம் முதல் அரச ஊழியர்களுக்கு மேலதிக இடர்காலக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

இதேவேளை ஓய்வூதியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 300ரூபாவுடன் 200 ரூபா அதிகரிக்கப்படவுள்ளது. (ந)

### தமிழர்......

நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ்.தேர்தல் மாவட்டத்தின் கூட்டணி முதன்மை வேட்பாளருமாகிய வீ. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் பிரதிமேயர் என்.ரவிராஜ், க.சின்னத்துரை, சி.சிவமகாராசா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர் மாவை சேனாதிராஜா மேலும்கருத்துக் கூறுகையில்.

வடக்குக்கிழக்கில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு மிகப் பயங்கர ஆயுதங்களையும் குண்டு வீச்சு விமானங்களையும் வாங்கி போரைத் தொடர்ந்து நடத்துவதில் மிகவும் கருத்தாக இருந்து வருகின்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை தமிழர் விடுதலைக் கூட்டணிவன்மையாக எதிர்க்கின்றது.

தொடர்ந்து போர்நடத்தி தாங்கள் நினைத்த ஒரு தீர்வுத் திட்டத்தை தமிழ்மக்கள் மீது திணிக்க வேண்டும் என இந்த அரசாங்கம் நினைப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றிய செய்தியாளர்கள் அரசியல் தீர்வுத் திட்டம், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், செம்மணிப் புதைகுழி, இடம் பெயர்ந்தோர் பிரச்சினை, அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி பல்வேறு விதமான வினாக்களைத் தொடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந-3-77-43)

### படையினரின்...

கொண்டுள்ளதாகவும் எனினும் படைத் தரப்பிலிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை படையினர் கைப்பற்றிய புலிகளின் சடலங்களும் வவுனியாவில் வைத்து வழங்கப்படுமென விசேட செய்தி ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ந)

### இலங்கையின்...

29 போனஸ் ஆசனங்களுக்கான தேசியப் பட்டியலை தயாரிப்பதிலும் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன முதலாவது தேசியப் பட்டியலை பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக்கட்சியும் வெளியிட்டுள்ளன பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட தமிழர்கள் எவரும் நிறுத்தப்படாத போதும் அதன் தேசியப் பட்டியலில் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் களம் இன்னமும் சூடுபிடிக்க ஆரம்பிக்கவில்லை வேட்பு மனுக்களை கையளித்த அரசியல் கட்சிகள் தேர்தலுக்கான உத்திகளையும் வியூகங்களையும் அமைப்பதில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் யுத்த சூழ்நிலை நீடித்து வருவதனால் மக்கள் பதட்டமடைந்த நிலையில் தேர்தலைப் பற்றியோ தேர்தலில் போட்டியிடுபவர்கள் பற்றியோ எவ்வித ஆர்வமும் காட்டவில்லையெனவும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் இன்றைய அவலநிலை பற்றி புரிந்து கொண்டிருப்பார்கள் எனவும் கட்சி சார்பற்ற பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மாவட்ட ரீதியான தேர்தல் களத்தில் குதித்துள்ள

## இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நுணாவில் வடக்கைச் சேர்ந்தகார்த்திகேசு (வயது-70) சின்னட்டி கோபாலு (வயது 60) ஆகியோரே பலியாகியுள்ளனர். (ந)

### அரசியல்...

இடம் பெற்றுள்ளார்:

தேசியப் பட்டியலுக்கு ஒவ்வொரு கட்சியும் 29 பேரை பட்டியலிட்டு வழங்கியுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தனது தேசியப் பட்டியலில் யாழ் பல்கலைக்கழக மாணவன்சு, ஐங்கரனை முதலாவது பட்டியலில் சேர்த்துள்ளது (வ)

### கூட்டணியின்...

வரும் யாழ் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி க.சண்முகநாதனிடம் தமது இராஜினாமாக் கடிதத்தைக் கையளித்துள்ளனர்.

எனினும் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இவ்விருவரினதும் பெயர்களும், இலக்கங்களும் வாக்குச் சீட்டில் இடம் பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

அரசியல் கட்சிகளின் எண்ணிக்கைவருமாறு:—

★ திருமலை மாவட்டம் - 17

★ குருநாகல் மாவட்டம் - 17

★ வன்னி மாவட்டம் -16

★ கண்டி மாவட்டம் - 16

★ மட்டக்களப்பு மாவட்டம் - 16

★ இரத்தினபுரி மாவட்டம் - 15

★ கேகாலை மாவட்டம் - 15

★ அநுராதபுரம் மாவட்டம் - 14

★ யாழ்ப்பாண மாவட்டம் 14

★ மாத்தளை மாவட்டம் - 14

★ நுவரெலியா மாவட்டம் - 14

★ காலி மாவட்டம் - 15

★ திகாமடுல்ல மாவட்டம் -12 (வ



வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

நல்லதோர் வீணை செய்தோம் - அதில்

நாமும் நாடும் நலம் பெற

அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!



(ஈ. பி. டி. பி)

ஈ. பி. டி. பி பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து யாழ், மாணவர்கள் கணனி அறிவை பெற்றுக் கொள்ள வசதியாக இவ்வாண்டு 100 பாடசாலைகளுக்கு 100 கணனிகள் வழங்கப்படவுள்ளன.

(இ/736)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது